**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 20/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மனோகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கிருஷ்ணன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு, திண்டுக்கல்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **60** |
| | | | **Dated** | : | **03.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**5-ம் எதிரி ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 4), **திரு. மனோகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திண்டுக்கல் சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 10.12.2014ம் தேதி காவல் ஆய்வாளர்

மற்றும் நான், என்னுடன் முதல் நிலை காவலர் திரு. பெட்ரிக் பிலவேந்திரகுமார் ஆகியோருடன் சந்தேக நபர்களை கண்காணிக்கவும், ரோந்து சென்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் ஒத்தக்கண் பாலம், ஒடுக்கம்ரோடு, கல்லறைத் தோட்டம் அருகே, பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த பிரபாகரன், டைசன்ராஜா, ஜீவரத்தினம், ராஜேஷ், நௌசாத் ஆகியோர்கள், அவர்கள்மீது நீதிமன்றத்தில் பழைய வழக்குகள் இருந்து வருவதாலும், அதனால் கூலி வேலை செய்து வருவதால் செலவிற்கு பணம் கட்டுபடி ஆகவில்லை என்றும், அந்த வழக்குகளை முடிக்க நிறைய பணம் வேண்டும் என்பதாலும், சுபபோக வாழ்கை வாழ முடிவு எடுத்தும், எனவே எல்லோரும் சேர்ந்து யார் வீட்டையாவது உடைத்து உள்ளே புகுந்து கொள்ளையடித்துவிட்டு, கிடைப்பதை எல்லோரும் சரியாக பகிர்ந்து கொண்டு, ஆளுக்கொரு பக்கமாக வெளியூர் சென்று, தலைமறைவாகிவிட வேண்டும் என்று, பேசிக் கொண்டு இருந்தவர்களை சுற்றி வளைத்து கைது செய்து, அதில் பிரபாகரன் என்பவரை விசாரித்தபோது, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு, கொடுக்க வாக்கமூலத்தினை 13.15 மணிக்கு பெற்றும், அதன்படி பிரபாகரன் எடுத்து ஆஜர் செய்த கத்தி மற்றும் இரும்பு ராடு, டைசன்ராஜ் எடுத்து ஆஜர் செய்த சக்தி மிளாகய் பொடி – 100 கி, 15.00 மணிக்கு ஜீவரத்தினம் எடுத்து ஆஜர் செய்த 5 கையுறை மற்றும் நைலான் கயிறு இவைகளை 15.30 மணிக்கு போலீசார் அத்தாட்சியில் தனித்தனியாக கைப்பற்றியும், அதன்பிறகு 16.30 மணிக்கு எதிரிகள் மற்றும் அத்தாட்சியில் கைப்பற்றி சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலையக் குற்ற எண். 561/2014, பிரிவுகள் 399, 402 இ.த.ச.வின்கீழ் வழக்கு பதிவு செய்து, சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சியில் நானும், என்னுடன் வந்த முதல் நிலை காவலர் திரு. பெட்ரிக் பிலவேந்திரகுமாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம்.

மேற்படி மூன்று அத்தாட்சிகளில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையதுதான். **அவை முறையே அ.சா.ஆ. 2 முதல் 4 வரை குறியீடு செய்யப்படுகிறன்றன. இந்த வழக்கில் கைப்பற்றிய பொருட்கள் சா.பொ. 1 முதல் 5 வரை குறியீடு செய்யப்படுகிறன்றன**. பின்பு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எதிரிகளை எந்த இடத்தில் இருந்து, எவ்வளவு தூரத்தில் இருந்து நாங்கள் பார்த்தோம் என்று காவல் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தினை காவல் நிலையத்தில் வைத்துத்தான் தட்டச்சு செய்தோம் என்றால், சரிதான். எதிரிகள் எந்த இடத்தில் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் எதிரிகள் கொள்ளையடிப்பதற்கு எந்த எதிரி என்ன பேசிக் கொண்டு இருந்தார் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றிய பொருட்கள் பொதுவாக அனைத்து கடைகளிலும் கிடைக்கக் கூடியவை என்றால் சரிதான். எதிரிகளின் பெயர், விலாசம் போன்ற விபரங்களை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம் என்று ஆய்வாளர் விசாரணையிலோ அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த ஒரு எதரியிடம் இருந்தும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சிகளை நான் என்னுடைய கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்று கேட்டால் நினைவில்லை. அந்த தேதியில் நான் ரோந்து பணியில் இருந்ததற்கான

என்னுடைய பாக்கெட் நோட்டை நான் ஆய்வாளரிடம் விசாரணையில் போது ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

<u>5–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சம்பவ இடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். அங்கு சுமார் 200 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடம் அருகே வேடபட்டி கிராமம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு ரோந்திற்கு சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஆயுதங்களை எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார்கள் என்று ஆய்வாளர் விாசரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. 5–ம் எதிரி தப்பி ஓடியதாக ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 5–ம் எதிரியிடம் இருந்து எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 5–ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை

என்றால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.03 17:28:08 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.